

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.12.2024) வேலூர் மாநகராட்சி பாதாள சாக்கடை இரண்டாம் கட்ட திட்டத்தின் ஒரு பகுதியாக விருதம்பட்டு சர்க்கார் தோப்பு பகுதியில் நிறுவப்பட்டுள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சோதனையோட்டம் நடைபெற்று வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் முனைவர் எஸ்.ஜெகத்ரட்சகன், டி.எம். கதிர் ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி.நந்தகுமார், வேலூர் மாநகராட்சி துணை மேயர் மா.சுனில்குமார், சிறப்புத்திட்ட செயலாக்கத்துறை செயலாளர் மருத்துவர். தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.இரா.சுப்புலெட்சுமி, சிறப்புத்திட்ட செயலாக்கத்துறை துணைச்செயலாளர் மு.பிரதாப் உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## 'வாட்ஸ் அப்'பில் வலம் வருகிறது!




### வேலூர் மாநகராட்சி பாதாள சாக்கடை இரண்டாம் கட்டத் திட்டம்:

# விருதம்பட்டு சர்க்கார்தோப்பு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சோதனை ஓட்டம்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்!

**வேலூர், டிச.8-**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.12.2024) வேலூர் மாநகராட்சி பாதாள சாக்கடை இரண்டாம் கட்டத் திட்டத்தின் ஒரு பகுதியாக விருதம்பட்டு சர்க்கார் தோப்பு பகுதியில் நிறுவப்பட்டுள்ள கழிவு நீர் சுத்தி கரிப்பு நிலையத்தில் சோதனையோட்டம் நடைபெற்று வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

அதன் விரபம் வருமாறு :

வேலூர் மாநகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் பகுதி1 TNUDPIII 20082015 திட்டத்தின்கீழ் ரூ.40.49 கோடி மதிப்பீட்டில் 48.00 கி.மீ நீளத்திற்கு பாதாள சாக்கடை குழாய் அமைத்து 10.28MLD கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

இரண்டாம் கட்டமாக AMRUT 201617 திட்டத்தின்கீழ் ரூ.690.91 கோடி மதிப்பீட்டில் 4 சிப்பங்களாக பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு TNUIFSL நிறுவனத்தின் மூலமாக ஆசிய உலக வங்கி (ADB) நிதியுதவியுடன் 421 கி.மீ நீளத்திற்கு குழாய்கள் அமைக்கவும் 50.00 MLD(STP) கொள்ளளவு கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கவும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 7.10.2019 அன்று பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

முதலமைச்சர் 3.02.2023 நடைபெற்ற ஆய்வின் போது இப்பணிகளை துரிதமாக முடிக்க அறிவுறுத்தியதன் அடிப்படையில் பணிகள் விரைந்து நடைபெற்று வருகிறது. தற்போது 401கி.மீ நீளத்திற்கு பாதாள சாக்கடை குழாய் அமைக்கும் பணிகள் முடிவடைந்துள்ளன.

இத்திட்டத்தின் கீழ் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் விருதம்பட்டு சர்க்கார் தோப்பு பகுதியில் நிறுவப்பட்டு சோதனையோட்டம் நடைபெற்று வருகின்றது. துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.12.2024) பாதாள சாக்கடை திட்டம் குறித்தும், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சோதனையோட்ட பணிகள் குறித்தும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மீதமுள்ள பணிகளை விரைந்து முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு அலுவலர்களுக்கு துணை முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் முனைவர் எஸ்.ஜெகத்ரட்சகன், டி.எம்.கதிர் ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி.நந்தகுமார், வேலூர் மாநகராட்சி துணை மேயர் மா.சுனில்குமார், சிறப்புத்திட்ட செயலாக்கத்துறை செயலாளர் மருத்துவர் தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் திருமதி வே.இரா.சுப்புலெட்சுமி, சிறப்புத்திட்ட செயலாக்கத்துறை துணைச் செயலாளர் மு.பிரதாப் உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில்

# அண்ணல் அம்பேத்கர் 68ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி!

## திருவுருவச் சிலைக்கு – பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு மாலை அணிவித்து மரியாதை!

*திருவண்ணாமலை, டிச.8-*

திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில், அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 68ஆம் ஆண்டு நினைவு நாள் அனுசரிக்கப்பட்டது. அவரது திருவுருவச் சிலைக்கு பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். நிகழ்ச்சியில் சட்டப்பேரவை துணைத் தலைவர்கு. பிச்சாண்டி, கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட செயலாளர் வசந்தம் கார்த்திகேயன் உட்பட கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

06.12.2024 வெள்ளிக்கிழமை காலை, திருவண்ணா மலை அண்ணா சாலை, மத்திய அஞ்சல் நிலையம் அருகில், திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில், அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 68ஆம் ஆண்டு நினைவு நாள் அனுசரிக்கப்பட்டது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன் தலைமை வகித்தார்.

செங்கம் சட்டமன்ற உறுப்பினரும், மாவட்ட துணை செயலாளருமான மு.பெ.கிரி, மாவட்ட துணை செயலாளர் பிரியா விஜயரங்கன், நகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, பொதுப்பணித் துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினருமான எ.வ. வேலு அவர்கள், அம்பேத்கர் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

சட்டப் பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட செயலாளர் வசந்தம் கார்த்திகேயன், கழக மருத்துவரணி துணை தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் மெய்யூர் சந்திரன், த.செந்தில், மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி. எம்.நேரு, காலேஜ் கு.ரவி, ஏ.ஏ.ஆறுமுகம், ஜெ.மெய்கண்டன், கு.கணேஷ், ஏ. டபள்யூ.சர்தார், பாலமுரளி கிருஷ்ணா, எல்.ஐ.சி. து. வேலு, கற்பகம் சரவணன், பொதுக்குழு உறுப்பினர் நா.பழனி, மாநகர துணை மேயர் சு.ராஜாங்கம், நகர நிர்வாகிகள் ஜீவரேகாவிஜயராஜ், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, அ.கண்ணன், ஹக்கிம் சேட் மற்றும் ஏந்தல் நாக.சங்கர், எம்.ஆர். கலைமணி, வேங்கிக்கால் பரத், துரை.வெங்கட், வழக்கறிஞர் எஸ்.கண்ணதாசன், மாவட்ட துணை அமைப்பாளர்கள் கிரிக்கெட் க.ரவி, ஏ.கே.ரத்தினகுமார், அ. மோகன்ராஜ், க.ரகுவர்மன், எஸ்.சமயராஜ், இரா.மின்னல் கமல், எம்.வெங்கடேஷ், ஏ.எம்.பாஷா, விஜி தேவராஜ், டி.பென்ராபர்ட், இராயல் தியாகு, ஆர்.வெங்கடேஷ், தீபலட்சுமி, காமாட்சி பாண்டியன், நகரமன்ற உறுப்பினர்கள் அ. கோவிந்தன், அ.வடிவேல், உதயாரவி வழக்கறிஞர் கிருஷ்ணமூர்த்தி, மற்றும் மா.ஞானம், கண்ணகி, வினோத்குமார், குணாளன், சா.ரகுநாத் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



சட்ட மாமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 68வது நினைவு நாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் ஈரோடு பன்னீர் செல்வம் பூங்காவில் உள்ள அம்பேத்கரின் திருவுருவச் சிலைக்கு மாவட்டக் கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி மாலை அணிவித்து, மலர்தூவி மரியாதை செலுத்தினார். நிகழ்வில் மாநில நிர்வாகிகள் எம்.கந்தசாமி, எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம், மாவட்ட நிர்வாகிகள் ஆ.செந்தில்குமார், செல்லப்பொன்னி, க.சின்னையன், டி.எஸ்.குமாரசாமி, பகுதி கழக செயலாளர்கள் பொ.ராமசந்திரன், வில்லரசம்பட்டி முருகேசன், கே.சந்திசேகர், கதிரவன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட கண்டு உப்பலாவாடி அம்பேத்கார் நகர்,கோண்டூர் பகுதி மக்களுக்கு உணவுப் பொருட்கள், அரிசி, காய்கறிகள், மளிகைப் பொருட்கள், போர்வை, புடவைகள் உள்ளிட்ட நிவாரண உதவிகளை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் வழங்கினார்.





தமிழக துணை முதல்வர் – மாநில இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 47வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு திருச்சி தெற்கு மாவட்ட, மாநகர, இளைஞர் அணியின் சார்பாக 47/3 மூன்றாவது நிகழ்வாக கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்வு மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. விழாவில் மாவட்ட செயலாளரும் பள்ளி கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி பொற்கிழிகளை வழங்கி சிறப்பித்தார். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வெங்கடேஷ்குமார், மாநகர இளைஞரணி அமைப்பாளர் முத்து தீபக் ஆகியோர் தலைமையில் நடந்த இந்நிகழ்வில் திருச்சி மாநகரச் செயலாளர்– மண்டலக் குழு தலைவர் மதிவாணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வண்ணை அரங்கநாதன், மாவட்ட மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் பாலமுருகன் ரவீந்திரன், தேசிங்கு ராஜா, பெர்னாடிசாமிநாதன், விஷ்ணுவரதன், சையத் சாகிப், அல்லாஹ் பிச்சை, ரஞ்சித்,கண்ணன் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் சரத்குமார் நன்றி கூறினார்.